விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 31 செவ்வாய்க்கிழமை (17.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 293

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ஹபரணை நிகம்பத்தனையில் வைத்து

# கடற்படை தொடரணி மீது தற்கொலைத் தாக்குதல்

## 105 பேர் பலி; 116 பேர் படுகாயம்!

(தம்புள்ள)

வடமத்திய மாகாணமான ஹபரணை அருகே நிகம்பத்தனை என்ற இடத்தில் தரித்து நின்ற கடற்படையினரின் வாகனத் தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத்தாக்குதலில் 105 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.


மேலும் 116 பேர் படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஹன்டர் வாகனத்தில் சென்றே இத் தற்கொலைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)



தற்கொலை தாக்குதல் நடத்த பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஹன்டர்...

## கிபீர் தாக்குதல் விமானம் வீழ்ந்து நொருங்கியது



(கொழும்பு)

இயந்திரக் கோளாறு காரணமாக கிபீர் ஜெட் விமானம் ஒன்று நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து நொருங்கியது.

இச் சம்பவம் நேற்று மாலை ஆறு மணியளவில் இடம் பெற்றுள்ளது. கட்டுநாயக்க விமான ஓடுதளத்தில் இருந்து வான்நோக்கி எழுந்து சுமார் ஓரிரு நிமிடங்களில் சிங்கபுரவத்த என்ற களப்புப் பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சென்ற விமானி பரசூட் மூலம் பாய்ந்து எவ்வித காயமும் இன்றி உயிர் தப்பினார்.

மூன்று கிபீர் விமானங்கள் வான் நோக்கி எழுந்தாகவும் அதில் ஒன்றே இயந்திரக்கோளாறு காரணமாக வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

இஸ்ரேல் நாட்டினால் விசேடமாக தயாரிக்கப்பட்ட இவ் கிபீர் விமானத்தை இலங்கை அரசு அண்மையிலேயே கொள்வனவு செய்திருந்தாகவும் கூறப்பட்டது. (எ-5,10)

## அரியாலை மத்தி கிராம சேவையாளர் மக்கள் முன்னிலையில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

அரியாலை மத்தி கிராமசேவையாளர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் தனது ஜே/95 கிராம சேவையாளர் பிரிவு அலுவலகத்தில் பொதுமக்கள் முன்னிலையில் சேவை செய்துகொண்டிருந்த சமயம் அங்கு சென்ற ஆயு (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்று மூவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் வைத்து நேற்று மூவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வடமராட்சி பருத்தித்துறை வியா பாரிமூலை நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் வைத்து ஒன்பது பிள்ளைகளின் தந்தையான திராணகம சூரிசிங்க (வயது 56) என்ற குடும்பஸ்தர் (04 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டவிரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பானது சட்டவிரோதமானது என உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை தனித் தனியாகப் பிரிக்குமாறுகோரி ஜே.வி.பியினர் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையின் பின்னரே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13வது திருத்த சட்டத்தின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் 1987 ஆம் ஆண்டு ஒன்றாக இணைக்கப்பட்டன.

ஆனால் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இம் மாகாணங்களை இணைத்தமையினால் கிழக்கு மாகா ணத்தில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களினது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் இச் சமூகங்களின் விகிதாசாரம் குறைவடைந்துள்ளதாகவும் தமது மனுவில் குறிப்பிட்ட ஜே.வி.பி. (04 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஷெல் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு

மட்டக்களப்பு வவுணதீவில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப் பட்டதுடன் இருவர் படுகாயமடைந்ததாகத் தெரியவருகின்றது.

வவுணதீவில் சிறிலங்கா இராணுவ முகா மிலிருந்து நேற்று முன்தினமிரவு 10 மணி யளவில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி செறிவான எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத் தாக்குதலுக்கு எதிராக தமிழீழ விடுத லைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் சமந்தசிறி (வயது-34) என்ற இராணு வத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார். படு காயமடைந்த இரு இராணுவத்தினர் மட்டக் களப்பு போதனா மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டது. (எ-5)

# அவுஸ்திரேலிய வல்லுநர்கள் இவ்வாரம் இலங்கை வருகை

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட அரச சார்பற்ற பணியாளர்களின் உடல்களை மீள் பிரேத பரிசோதனை செய்வதற்காக அவுஸ் திரேலிய தடவியல் வல்லுநர்கள் இந்த வாரம் இலங்கை வருகை தரவுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட 15 அரசசார் பற்ற பணியாளர்களின் உடல்கள் அநுராத புரம் நீதிபதி, 4நீதித்துறை மருத்துவர்கள் மற் றும் பிரான்ஸ் அரச சார்பற்ற நிறுவனஅதி காரிகள் ஆகியோர் முன்னிலையில் எதிர் வரும் வாரம் தோண்டி எடுக்கப்பட்டு கொழும்பு கொண்டு செல்லப்படவுள்ளது.

ஏற்கனவே இரண்டு அரச சார்பற்ற பணியாளர்களின் உடல்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த உடல் களை மீள் பிரேத பரிசோதனை செய்ய அவு ஸ்திரேலியாவின் தடவியல் வல்லுநர்கள் மீண்டும் வருகை தரவுள்ளனர்.

மீள் பிரேத பரிசோதனைக்காக அவர்கள் முன்னர் இலங்கை வந்தபோதும்உரிய ஒப் பந்தத்தை உருவாக்காததால் அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## யாழ்.நகரப் பகுதியில் நேற்று வீதிச் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கடுமையான சோதனை நடவடிக்கையை இராணுவத்தின ரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண் டனர்.

யாழ்.பஸ்நிலையம், கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி ஆகிய இடங்களில் வாக னங்கள், நடையாகவந்தவர்கள், மோட்டார் சைக்கிள், சைக்கிளில் வந்தவர்கள் மறிக் கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.(எ-1)

## பல்கலைக்கழகத்தில் அஞ்சலி நிகழ்வு

கல்வியாளரும் ஊடகவியலாளருமான ஏ.ஜே.கனகரத்தினாவுக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகச் சமூகத் தினர், ஊடகவியலாளர்கள் மற்றும் இலக் கிய அபிமானிகள் அஞ்சலி உரை நிகழ்த் தவுள்ளனர்.

அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம் என அழைப்பு விடுக்கப்பட்டு ள்ளது. (ஏ)

## தென்னாபிரிக்காவை 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது நியூசிலாந்து

மினி உலகக் கிண்ண லீக் போட்டியில் ஸ்ரீபன் பிளமிங்கின் சிறப்பான துடுப்பாட்டத் தினால் நியூசிலாந்து அணி தென்னாபிரிக் காவை 87 ஓட்டங்களால் வீழ்த்தியது.

பிரிவு பியைச் சேர்ந்த தென்னாபிரிக்க மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையி லான லீக் போட்டி நேற்று மும்பையில் நடை பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடு ப்பெடுக்குமாறு நியூசிலாந்தைப் பணித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தா டிய நியூசிலாந்து அணி 45.4 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட் டங்களைப் பெற்றது.

இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் 89 ஓட்டங்களை யும் விக்கெட் காப்பாளர் மக்குலம் 21 ஓட்ட ங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென் னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஹலிஸ் 3 விக் கெட்டுக்களையும் பீற்றசன் 2 விக்கெட்டுக் களையும் கொலக் நெல்கோல் மற்றும் சுமித் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த் தினர்.

பதிலுக்கு 196 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி நியூசிலாந்து பந்து வீச்சாளர்களின்பந்துகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 34.1 ஓவர்களில் 108 ஓட்டங்க ளை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்க ளையும் இழந்து 87 ஓட்டங்களால் தோல்வி யடைந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் சுமித் 42 ஓட்டங்களை பெற்றார். (எ-5)

## சிறுவர் சங்கமம்

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடங்களில் உள்ள கழகங்களை இணைத்து சிறுவர் சங்கம் நடாத்தும் சிறுவர் சங்கம நிகழ்வு எதிர்வரும் 22,24 ஆம் திகதிகளில் தும்பளை லூர்த்து மாதா ஆலயத்தில் காலை 9.30 மணிதொட க்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெற வுள்ளது. (எ)

## சிறுவர்களுக்கான பால்மா விநியோகம்

ஒரு வயதுமுதல் ஐந்து வயது வரையி லான சிறுவர்களுக்கான பால்மாவகைகள் (அங்கர் 1+, நெஸ்பிறே 1+) சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் தாய்சேய் நலச் சிகிச்சை நிலையங்கள் மூலம் இவ்வாரம் விற்பனை செய்யப்படும் என யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

இப் பால்மாக்களை வாங்க விரும்பும் பெற்றோர் பிள்ளையின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டினை அருகிலுள்ள தாய்சேய் நல சிகிச்சை நிலையத்தில் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (எ)

## பெற்றோல் விநியோகம்

எரிபொருள் விநியோக அட்டைக்கு இது வரை பெற்றோல் பெற்றுக் கொள்ளாத மோட்டார்வண்டிப்பாவனையாளர்களுக்கு (பொதுமக்களுக்கு) இன்று 200 ரூபாவுக்கு பெற்றோல் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட எரி பொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் விநியோகிக்கப்படுவதுடன் திருநெல்வேலி குகன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான எரிபொருளினை நல்லூர் பல நோக்குக் கூட் டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத் தில் பெற்றுக் கொள்ளலாம்எனத்தெரிவிக் கப்பட்டது. (எ-133)

## பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சரத்காமினி பெண் கில்டர் நைற்றிங்கேல்
இல.14, புதிய வீடமைப்புத் திட்டம்
குருநகர், யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல.விவாகரத்து/682

எதிராக

சமரப்புளிகே சைநேரிஸ் பெனாண்டோ
சரத்காமினி
125,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

எதிராளி

இவ்வழக்கு 2006ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு அவர்களும் பிரசன்னமா யிருக்க மன்றின் கட்டளைப்படி எதிராளிக்கு அழைப்புக் கட்டளை 27.07.2006ம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரித்து பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதியாகிய 04.08.2006ல் மன்றில் கூப்பிடப்பட்டபோது எதிராளி சமுகமின்மையால் இவ்வழக்கு ஒரு முக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒரு முக விளக்கத்திற்கு எடுக்கப் பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது வ 1 ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டு டன்சேர்த்து பரிசீலித்து வழக்காளியின் பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெற தகுதியு டையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையில் 2001ம் ஆண்டு டிசம்பர்மாதம் 2ம்திகதி நிறை வேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வேண்டுமென்று விட்டுச் சென்று வன்ம உறவறுப்புச் செய்தமையால் இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதென கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

றோசினி வலன்ரீனா என்ற மூன்று வயதுநிரம்பிய பெண் குழந்தை தொடர்ந்தும் வழக் காளியின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வர வேண்டும் என்றும் கட்டளையிடப் படுகின்றது.

பின்னுறுதித் தீர்வின் பிரதி 'வலம்புரி'தேசிய தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத் தல் மூலம் எதிராளிக்குப் பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத் திற்குள் எதிராளி எவ்வித நடவடிக்கையும் எடுக்கத்தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படும் என கட்ட ளையிடப்படுகின்றது.

2006ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி

வரைந்தது,

மு.திருநாவுக்கரசு
வழக்காளியின் சட்டத்தரணி.

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

நீதிமன்றக் கட்டளைப்படி

து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(474)

## பால்மா விநியோகத்தில் முறைகேடு முகாமையாளர்களுடன் மக்கள் முறுகல்

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடான பால்மா விநியோகத்தில் முறைகே டுகள் இடம்பெறுவதாக மக்கள்விசனம் தெரி வித்துள்ளனர்.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங் கத்தின் கிளைகள் ஊடாகவே அதிகம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பால்மாவைப் பெற்றுக் கொள்வதற்காக மறுநாள் வருமாறு கிளை முகாமையாளர் களினால் அறிவிக்கப்படுகின்றது. எனினும் அறிவிக்கப்பட்ட அன்றே பால்மா விநியோ கிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதைவிட விநியோகத்திற்கு வழங்கப்பட்ட பால்மா பைக்கெற்றுக்களை சில பங்கீட்டு அட்டைகளுக்கென ஒதுக்கப்பட்ட பின் ஏனை யவர்களுக்கு முடிந்து விட்டது என கூறப்படு வதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கிளை முகாமையாளர் களுக்கும் பொதுமக்களுக்கும் தொடர்ந்தும் முறுகல் நிலை காணப்படுவதாகவும் தெரி விக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்துஉரிய அதிகாரிக ளுக்கு தெரிவிக்கப்பட்டபோதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. (எ-1)

## அடையாள அட்டை பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மா வத்தை கொழும்பைச் சேர்ந்த இராசையா சிவானந்தன் என்பவ ரது (443481885V) என்ற இலக்க அடை யாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்து அதனைப் பெற் றுக் கொள்ளலாம். (து-133)

## கண்ணீர் அஞ்சலி



மறைந்த எமது சிற்றூழியர்

அமரர் சபாரத்தினம் அநந்துரை

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தின்ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை. வேண்டுகின்றோம்.

நலன்புரிக் கழகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

(c-521)

அகங்காரமும் கோபமும் ஒன்று சேராதபடி அடிக்கடி கண்காணிக்க வேண்டும். அகங்காரமும் கோபமும் மனிதனை அழிக்கவல்லவை. எப்போதும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். -சுவாமி இராமதாஸர்

வலம்புரி

## பாலித கோகன்னவின் சூளுரை

முகமாலை மோதல் முடியவில்லை. மீண்டும் போர்க்களத்தில் சந்திப்போம். இவ்வாறு அரச சமாதானச் செயலப் பணிப்பாளர் பாலித கோகன்ன கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை இம்மாதம் 28 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளை நோர்வே மேற்கொண்டிருக்கையில் சமாதானச் செயலப்பணிப்பாளர் பாலித கோகன்ன முகமாலை யுத்தம் முடியவில்லை எனக் கூறியதிலிருந்து அரசின் உள்நோக்கம் அம்பலமாகியுள்ளது.

'முகமாலை மோதல் முடியவில்லை' என பாலித கோகன்ன கூறியதிலிருந்து இராணுவ நடவடிக்கையை அரசு முன்னெடுக்கவுள்ளது என்னும் முடிபுக்கு நாம் வர முடியும்.

முகமாலை மோதல் சம்பவம் சமாதான முயற்சியைப் பாதிக்கும் என முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்க கூறியிருக்கையில்,

மீண்டும் போர்க்களத்தில் சந்திப்போம் என பாலித கோகன்ன கூறுவது மக்களைப் பயமுறுத்தும் செயலாகும்.

நாட்டில் யுத்தம் தந்த அழிவுகளை ஒருகணம் சிந்திக்க வேண்டும். இலங்கை மண்ணில் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்தால் எத்துணை நன்மை என்பதை பொறுப்பான அதிகாரங்களில் இருப்பவர்கள் சிந்திக்க வேண்டும்.

எங்கும் மரண ஓலம்; எங்கும் அழுகுரல்; தந்தையை இழந்த பிள்ளைகள்; பிள்ளைகளை இழந்த பெற்றோர்; கணவனைப் பறிகொடுத்த விதவைகள் இப்படியோர் சோகப் பட்டியல் நீண்டு செல்கிறது.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் அந்த அதிகாரத்தை இறைவன் தமக்குத் தந்ததாக எண்ண வேண்டும். அப்போதுதான் எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் தான் சார்ந்த உறவுகளின் உயிர் போல் மதிக்கும் மாண்பு உருவாகும்.

கொலைக்குக் கொலை ; பழிக்குப் பழி; பதிலுக்குப் பதில் என்றால் இந்த உலகம் இயங்க முடியாது.

எனவே யுத்தத்தைத் தூண்டும் கருத்துக்களை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இணைத் தலைமை நாடுகளின் வேண்டுதலுக்கு அமைய சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் படைபலம் பற்றிய வியாக்கியானங்கள் தேவையற்றவை. பயங்கரவாதத்தை இராணுவ நடவடிக்கை மூலம் ஒழிக்க வேண்டும் என பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இந்தியாவில் தெரிவித்தார்.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசு தயாரில்லை என பாதுகாப்புச்சார் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

இப்போது முகமாலை யுத்தம் முடியவில்லை. மீண்டும் போர்க்களத்தில் சந்திப்போம் என அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்ன கூறியுள்ளார்.

இவை பேச்சுக்கு அழகாகவிருக்கும். ஆனால் இவற்றின் விளைவுகள் பாரதூரமானவை என்பதால் பொறுமையோடு பேசுங்கள்-சமாதானத்திற்காக கதையுங்கள் என்பதை மட்டுமே நாம் கூறமுடியும்.

# இராணுவத்தை இலக்கு வைப்பதற்கான வாய்ப்புக்களை மறுப்பதற்கு இல்லை!

## இளந்திரையன் தெரிவிப்பு



தமிழ் மக்கள்மீதான தாக்குதல்களை இராணுவம் தொடர்ந்து நடத்துகின்றபோது போர்க்களங்களுக்கு அப்பால் இரா ணுவம்மீது இலக்கு வைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் நாம் மறுப்பதற்கில்லைஎன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

ஹபரணைத் தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே இளந்திரையன் இதனைத் தெரிவித்தார். இராணுவமானது தனது இலக்குகளை பல கிலோமீற்றருக்கு அப்பால் தெரிவு செய்கின்றபோது அந்த இலக்குகளில் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

திருகோணமலை சம்பூர், மூதூரில் தாக்குதல்களை உதாரணமாகக் கொள்ளலாம். நேற்று மாலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை மாங்குளம், புதுக்குடியிருப்புப் பகுதிகளில்விமானப்படைக்குச் சொந்தமான கிபீர் விமானங்கள்குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.

தற்போது அந்த இடங்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சென்று பார்வையிட்டுள்ளனர். இப்படியான நிலையில் மக்களைப் பாதுகாக்க வேண்டியது வலுச்சம நிலையைப் பேண வேண்டியதுமான நிலை எங்களுக்கு உள்ளது.

ஆகவே போர்க்களங்களுக்கு அப்பால் இராணுவம் இலக்கு வைப்பதற்கான வாய்ப்புக்களை நாம் மறுப்பதற்கில்லை. இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்காக திருகோணமலை மாவட்டத்தளபதி சொர்ணத்திடம் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தியபின் ஊடகங்களுக்குத் தெரிவிப்போம் என இளந்திரையன் தெரிவித்தார்.

இதேவேளை எந்த வகையிலும் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து விலகமாட்டார்கள் என்றும் அவர் கூறினார். (எ-1)

# திட்டமிட்ட திகதிகளில் பேச்சுக்கள் நடக்கும்

## அமைச்சர் ரம்புக்வெல தகவல்

ஹபரணையில் மேற்கொண்ட தாக்குதல் மூலம் விடுதலைப்புலிகள் தமக்கு சமாதானத்தில் நம்பிக்கையில்லை என்ற தகவலை அனுப்பியுள்ளனர் என பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நிராயுதபாணிகளாக தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என்றார். நாம் பேச்சுக்களில் கலந்து கொள்ளலாம். ஆனால் இந்தத் தாக்குதலின் பின்னர் இலங்கையில் அமைதி வரும் இல்லையா? என்பது குறித்து தெரியாதுள்ளது என்றார்.

இந்த நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்திற்குமான அரசின் கடப்பாட்டின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் அவசியமானவை என்றே தாம் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.

எப்படியிருந்த போதிலும் திட்டமிட்ட திகதிகளில் பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார். தமிழ்மக்கள் இந்தச் சூழ்நிலையில் தீர்க்கப்பட வேண்டும்என்று கூறுகின்ற விடயங்கள் குறித்துப் பேசுவதில் தாங்கள் மிகுந்த அக்கறையுடன் இருப்பதாக ரம்புக்வெல கூறினார். (எ)



# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்த்த ஒன்றுதான்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு. தாங்கள் எதிர்பார்த்த ஒன்றுதான் என்று தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், இத் தீர்ப்பினை தங்களுக்கு ஏமாற்றத்தை தருகிற ஒரு விடயமாக தாங்கள் கருதவில்லை. ஏனென்றால் இது தாங்கள் எதிர்பார்த்த ஒன்று தான் என்றார் அவர்.

அதற்கான காரணத்தினை கூறிய அவர் ஜே.வி.பியினால் தொடரப்பட்ட வழக்கில் கிழக்கு மாகாணத்தினை சேர்ந்த மூன்று தமிழ் பிரஜைகள் ஆஜராகிய இணைப்பின் நியாயத்தினை நீதிமன்றத்தின் முன்பு வைப்பதற்கு நீதிமன்றம் அனுமதிக்கவில்லை என்றும், ஆகவே இந்த தீர்ப்பு தங்களுக்கு ஏமாற்றத்தை தரவில்லை என்றாலும் இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை மீறி அதன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீறி இவ்வாறு முடிபு எடுக்கப்பட்டிருப்பது ஒரு பெரும் அநீதி என்றுதான் தாங்கள் கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

இது சமாதானப் பேச்சுக்களை பெரிதும் பாதிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதே தீர்ப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வடக்கு கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டிருந்த போது கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் பலம் வேண்டுமென்று குறைக்கப்பட்டிருந்தது என்பதினை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீண்ட காலமாக கூறி வருவதாக தெரிவித்தார்.

மேலும் இந்த தீர்பினை தாங்கள் வரவேற்கவும் இல்லை. அதே சமயம் எதிர்க்கவும் இல்லை என்று குறிப்பிட்ட அவர் இந்த தீர்ப்பினால் வடக்கு கிழக்கின் இனப்பிரச்சி னை தீர்ந்து விடும் என்று யாராவது எண்ணினால் அது மிகவும் தவறானதொன்றாக இருக்கும் என்றும் கூறினார். (எ-5)

## தேநீர்க் கடை உரிமையாளர் யாழ்.நகரில் சுட்டுக் கொலை

யாழ்.நகரில் தேநீர்க் கடை உரிமையாளர் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவம் நேற்றுக் காலை 9.45மணியளவில் ஆஸ்பத்திரிவீதிச்சந்தியடியில் அமைந்துள்ள தேநீர்க் கடையில் இடம்பெற்றது.

சம்பவத்தில் மண்டைதீவைச் சேர்ந்த அரியதுரை அரியசிவம் (வயது-48) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவரின் கடைக்குச் சென்று தேநீர் குடித்துவிட்டு ஒருவர் வெளியே சென்று விட்டதாகவும் மற்றைய இருவர் சிறிது நேரம் இருந்து விட்டு உரிமையாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த குடும்பஸ்தரை சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் உயிர் இழந்துள்ளார்.

இச் சம்பவ இடத்திற்குச்சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்குப் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

## சித்தன்கேணியில் வைத்து குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

சித்தன்கேணியில் தொலைத்தொடர்பக உரிமையாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் வட்டு.தெற்கு சித்தன்கேணியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான செல்லையா நந்தகுமார் (வயது-46) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். நேற்றுக் காலை 8.20 மணியளவில் குறித்த குடும்பஸ்தரின் வீட்டுக்கு சென்ற ஆயுத தாரி அவரைபெயர் குறிப்பிட்டு அழைத்து அவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த குடும்பஸ்தரின் சடலம் சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதனால் வைத்தியசாலைக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு வட்டுக் கோட்டைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)





ஹபரணையில் நேற்று இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் சேதமடைந்த பஸ்களையும் வீதியோரமாக குவிக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களையும் படங்களில் காணலாம்.

# உடுப்பிட்டியில் கிளைமோர் பொலிஸ் உட்பட இருவர் பலி

வல்வெட்டித்துறை வீதியில் நேற்று மதியம் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் படையினர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருமே உயிரிழந்தவர்களாவர்.

வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து அவ்விடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வெடித்ததன் காரணமாகவே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான மத்திய நிலையம் தெரிவித்தது. (எ-5,10)

# யசூசி அகாஷி நாளை கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

இலங்கைக்கு வருகை தந்துள்ள யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி நாளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இச் சந்திப்பு முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பில் இராணுவத்தினரின் பனிச்சங்கேணி மற்றும் முகமாலை உள்ளிட்ட வலிந்த தாக்குதல் நடவடிக்கைகள் மற்றும் ஒக்ரோபர் பேச்சுக்கள் தொடர்பில் விவாதிக்கப்படக்கூடும் என்று கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன. (எ)

# யசூசி அகாஷி நேற்று ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இம் மாதம் 28,29 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக நேற்று முன்தினம் இலங்கை வந்த யப்பான் விசேடதூதுவர் யசூசி அகாஷி நேற்று ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்து உரையாடினார்.



இலங்கை அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழுத்தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கிய பிரமுகர்களையும் அவர் நேற்று சந்தித்துப் பேசினார்.

ஜெனீவாவில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முன்னர் யசூசி அகாஷி கிளிநொச்சிக்கும் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் பேசவுள்ளார்.

எனினும் இதற்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை என்று யப்பானியத் தூதரக அதிகாரி தெரிவித்தார். சுமார் எட்டு மாத கால இடைவெளிக்குப் பின்னர் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்த அரசும் புலிகளும் இணங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

## வடக்கு-கிழக்கு...

அதனால் இம் மாகாணங் களை 1987 இற்கு முன்னதான நிலை யில் இருந்த வாறு வெவ் வேறாகப்பிரிக்குமாறு கட்டளையிடக் கோரி இவ் வழக்கினைத் தொடர்ந்திருந்தது.

உச்ச நீதிமன்ற நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான ஐவர் கொண்ட நீதியரசர் குழு இவ் வழக்கு மீதான தீர்ப்பினை நேற்று வழங்கியது.

எதிர்வரும் காலங்களில் தேர்தல்கள் நடத்தப்படும்போது தனித்தனியாக இரண்டு மாகாணங்களுக்குமான தேர்தல்கள் நடத்தப்படவேண்டுமெனவும் இத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தீர்ப்பினையடுத்து வடக்கு- கிழக்கு மாகாணங்களின் செயற்பாட்டை தனித்தனியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (எ-5,9)

## வடமராட்சியில் நேற்று...

இனந்தெரியாத ஆயுததாரி களால் நேற்றுக் காலை 6.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் காலியை சொந்த இடமாக கொண்டவர் எனவும் ஓராங்காட்டைவியாபாரிமூலையில் திருமணஞ் செய்து வாழ்ந்து வந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை கடைக்குப் பாண் வாங்கச் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கரவெட்டி சம் பந்த கடைப் பகுதியில் நேற்று பகல் 1.30 மணியளவில் இனந்தெரியாத ஆயு ததாரிகளால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பகுதியில் திருமணம் செய்து துன்னாலையில் வசித்து வந்தவரான வன்னியசிங் கம் நல்லதம்பி (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது இவ்வாறிருக்க பருத்தித் துறை பத்திரகாளி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த முகமட் முஸ்தப்பா (வயது 48) என்ற முஸ்லிம் குடும்பஸ்தர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதி வான் அரியநாயகம் மருத்துவப் பரிசோத னைக்காக சடலங்களை மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (எ-5,52,10)

## கடற்படைத் தொடரணி மீது...

திருகோணமலையிலிருந்து கொழும்பு செல்லும் வீதியில் ஹபரணைக்கும் தம்புள்ளவுக்குமிடையில் உள்ள நிகம்பத்தனையில் வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையிலிருந்து விடுமுறையில் தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த கடற்படையினர் மற்றும் விடுமுறையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த கடற்படையினரின் வாகனத் தொடரணிமீதே இத்தற்கொலைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இவ் வாகனத் தொடரணி மீது வெடிபொருள்கள் நிரம்பிய ட்ரக் ஒன்று மோதியதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து விடுமுறையில் கொழும்பு நோக்கி 3 பஸ்ஸில் சென்ற 96 கடற்படையினரும், விடுமுறையை கழித்துவிட்டு கடமைக்காக திருகோணமலை நோக்கி 3 பஸ்ஸில் சென்ற சுமார் 94 கடற்படையினரும் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய இரண்டு டிரக் வண்டியில் சென்ற 10 கடற்படையினருமாக சுமார் 200 பேர் இத் தாக்குதலில் சிக்கியுள்ளனர்.

விடுமுறையில் சென்றவர்களையும் விடுமுறையை முடித்துக் கொண்டு திரும்பியவர்களையும் அடையாளப்படுத்துவதற்காக குறிப்பிட்ட இடத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டபோது இத்தாக்குல் நடத்தப்பட்டுள்ளது.

தம்புள்ளப் பகுதியிலிருந்து ஹபரணை நோக்கி மிக வேகமாக வந்த ஹன்டர் வாகனம் திடீரென கடற்படையினர் தரித்து நின்ற இடத்திற்கு சடுதியாகத் திரும்பி வெடித்ததாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் 105 கடற்படையினர் உயிரிழந்தாகவும் 116 கடற்படையினர் படு காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களும் பொருட்களும் சம்பவ இடத்தில் சிதறிக்கிடந்தாக அங்கு சென்ற செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் பயணித்தவாகனங்கள் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன. அப்பகுதியைச் சூழவும் இரத்தமும் சதைகளும் சிதறிய உடற்பாகங்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த தம்புள்ள, மாத்தளை மற்றும் அநுராதபுரம் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மிகவும் மோசமாகக் காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். கடற்படையினரின் 14 வாகனங்கள் இந்தத் தாக்குதலில் சேதமடைந்ததாகவும் , 9 வாகனங்கள் மிகவும் மோசமாகச் சேதமடைந்ததாகவும் செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் பலரின் நிலை மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையின் போர் வரலாற்றில் தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் அதிக எண்ணிக்கையிலானோர் கொல்லப்பட்ட சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5,10)

## அரியாலை...

ததாரிகளினால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கண்டி வீதி யாழ். நகரைச் சேர்ந்த மூன்று பிள்ளை களின் தந்தையான மார்க்கண்டு மகேந்திரன் (வயது 48) என்ற கிராம சேவையாளரே கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற் கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)





விண்ணப்பித்து விட்டீர்களா!

அமெரிக்கன் லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் எமது நிறுவனத்தின் ஊடாக இணையத்தளத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு பற்றுச்சீட்டும் வழங்கப்படுகின்றது

கட்டணம் :- 200/= மட்டுமே

உங்களுக்கும் அதிஷ்டம் உண்டு. ஒருமுறை விண்ணப்பித்துப் பாருங்கள். வெற்றி பெற்றால் விமானச் செலவுடன் அமெரிக்கா செல்லலாம்.

C.B Computer Academy
Station Road, Kondavil. T.P No. 021-4590291


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.